## கொரோனா அறிகுறிகள் உள்ளவர்களுக்கு அனுமதி இல்லை

# 5 நிமிடங்களுக்கு ஒரு மெட்ரோ ரயில் இயக்கம்

### ■ காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை ஓடும் ■ வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

சென்னை, செப். 4: மெட்ரோ ரயில் சேவை 7ம் தேதி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மட்டுமே இயக்கப்படும். 5 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரயில் இயக்கப்படும். கொரோனா மற்றும் மற்ற நோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு அனுமதி இல்லை என்று வழிகாட்டு நெறிமுறைகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:

மெட்ரோ ரயில்சேவை தொடக்கத்தில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இயக்கப்படும். நீலவழித்தடம்- விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில்நிலையம் இடையே 7ம் தேதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை 5 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படும்.




பச்சை வழித்தடம்- பரங்கிமலை மெட்ரோ மற்றும் புரட்சி தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இடையே 9ம் தேதி புதன்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை மாலை 5 மணி முதல் 8 மணிவரை 5 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படும்.

சென்ட்ரல் மெட்ரோ ரயில்நிலையத்தில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலைய மெட்ரோ செல்லும் நேர்வழித்தட மெட்ரோ ரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே பயணிகள் ஆலந்தூர் மெட்ரோ ரயில்நிலையத்திற்கு மாறி விமான நிலைய மெட்ரோ செல்லவேண்டும். தூயகாற்றின் சுழற்சியை அதிகரிக்கவும், தனிமனித இடைவெளியை பின்பற்றி பயணிகள் மெட்ரோ ரயில்களில் ஏறவும், இறங்கவும் ரயில்நிலையங்களில் மெட்ரோ ரயில்கள் நிறுத்தப்படும் நேரம் 20 வினாடிகளில் இருந்து 50 வினாடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

அனைத்து மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில்நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும், காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்து x குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்த குறியீடுகளை பின்பற்ற வேண்டும்.

மெட்ரோ ரயில்நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். நுழைவு வாயில்களில் அனைத்து பயணிகளுக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படும். பயணிகள் எவருக்கேனும் கொரோனா அறிகுறி அல்லது அதிக உடல் வெப்ப நிலை இருந்தால் அவர்கள் ரயிலில் பயணிக்க அனுமதிக்கமாட்டார்கள்.

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி ரயில்நிலையங்களில் உள்ள கடைகள், தானியங்கி வசதியுள்ள நிலையங்கள் மற்றும் சிற்றுண்டியகம் திறக்கப்படும்.

மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்டர்களில் பயண அட்டைகள் வழங்கப்படுவதுடன் ரீசார்ஜ் செய்யப்படும். பயணிகள் க்யு ஆர் குறியீடு மூலமாகவும் பயணச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம். மெட்ரோ ரயில் நிலையங்களில் பயண அட்டையை ரீசார்ஜ் செய்வதற்காகவும், பயண அட்டையின் கால அளவை நீட்டிப்பதற்காகவும் பயணிகள் வரிசையில் நிற்பதைத் தவிர்க்க 32 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் பயண அட்டையை ரீசார்ஜ் செய்யும் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. ஒரு வழி பயணச்சீட்டுகள் ஊக்குவிக்கப்பட மாட்டாது. இருப்பினும் பயணிகளின் தேவை அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்ட டோக்கன்கள் வழங்கப்படும்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும், அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி சென்னை மெட்ரோ நிறுவனத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இவ்வாறு மெட்ரோ நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.